# INTERNATIONAL INDIAN SCHOOL - DAMMAM

**SUMMATIVE ASSESSMENT - II ( 2015-2016 )**

**Class : VIII** — **Tamil** — எட்டாம் வகுப்பு
**Time : 3 hours** — **தமிழ்** — நேரம் - 3 மணி
**Marks : 90** — மதிப்பெண்கள் - 90

<u>பிரிவு - அ</u>

1 ) **கொடுக்கப்பட்டுள்ள உரைநடையைப் படித்துப் பொருளுணர்ந்து கேட்கப் பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக.**

மக்கள் தொகைப்பெருக்கம், எரிமலைக் குமுறல்கள், மனிதனின் நாசவேலை ஆகியவற்றால் காடுகள் அழிக்கப்படுகின்றன. காட்டுத்தாவரங்கள் புற்று நோயைத் தடுக்கும் ஆற்றல் பெற்றவை. இவை அழிக்கப்பட்டால் மருந்துக்குப் பயன்படும் மரங்கள் இல்லாமல் போகும்.காடுகள் அழிக்கப்பட்டால் நீர் வறண்டு போகும். சதுப்பு நிலக்காடுகள் கடல் அரிப்பினைத் தடுக்கின்றன. காடுகள் அழிக்கப்பட்டால்,அங்கு வாழும் விலங்கினங்களும் பறவையினங்களும் தாமாக அழிந்துவிடும். காகித ஆலைகளுக்காக மரங்கள் வெட்டப்படுகின்றன. மக்கள் இன்று வயல்வெளிகளை அழித்து,ரியல் எஸ்டேட்டுகள் என்ற பெயரில் வளமனைகள் கட்டி மகிழ்ந்து வாழ்ந்து வருகின்றனர்.

<u>வினாக்கள்</u>

i ) காடுகள் அழிய காரணமாயிருப்பவை எவை ? **2**

ii ) கடல் அரிப்பினைத் தடுப்பவை எவை ? **2**

iii ) காடுகள் அழிக்கப்பட்டால் ஏற்படும் தீமைகள் யாவை ? **3**

iv ) _________ ஆலைகளுக்காக மரங்கள் அழிக்கப்படுகின்றன . **1**

அ) சர்க்கரை　　ஆ) நெசவு
இ ) காகித　　ஈ ) இரும்பு

v ) ரியல் எஸ்டேட்டுகள் என்ற பெயரில் மக்கள் _________ கட்டி மகிழ்ந்து வாழ்ந்து வருகின்றனர். **1**

அ) கோயில்கள்　　ஆ) தொழிற்சாலைகள்
இ ) வளமனைகள்　　ஈ ) பள்ளிகள்

vi ) புற்றுநோயைத் தடுக்கும் ஆற்றல் பெற்றவை ______________. **1**

அ) காட்டு யானைகள்　　ஆ) காட்டில் வாழும் பறவைகள்
இ ) காட்டு எருமைகள்　　ஈ ) காட்டுத் தாவரங்கள்

2 ) **கடிதம் எழுதுக.** **8**

பரிசுபெற்ற நண்பனுக்குப் பாராட்டுக் கடிதம் எழுதுக.

3 ) **கட்டுரை எழுதுக.** **8**

சுற்றுப்புறச்சூழலைப் பாதுகாப்போம்

<u>பிரிவு - ஆ</u>

4 ) **பொருத்தமான சான்றினைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** **3 x 1 = 3**

**i) நேர் இணைச்சொற்கள்**

அ) ஈடு இணையற்ற    ஆ) மேடு பள்ளம்

இ ) வரவு செலவு    ஈ ) அன்றும் இன்றும்

**ii) இனமுள்ள அடைமொழி**

அ) தோய் தயிர்    ஆ) வெண் திங்கள்

இ ) நீல மயில்    ஈ ) செஞ்ஞாயிறு

**iii) இரண்டாம் வேற்றுமை**

அ) வளவன் பள்ளியைக் கட்டினான்    ஆ) காகிதத்தால் ஆன கப்பல்.

இ ) தேர்வுக்குப் படி    ஈ ) வளர்மதி யார் ?

5 ) **பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து நிரப்புக.** **3 x 1 = 3**

**i) கன்னங்கரேலென** என்பது __________ .

அ) நேர் இணைச்சொற்கள்    ஆ) எதிர் இணைச் சொற்கள்

இ ) செறிவிணைச் சொற்கள்    ஈ ) அடைமொழி

**ii) கண்ணா வா!** - என்பது _________ .

அ) ஏழாம் வேற்றுமை    ஆ) எட்டாம் வேற்றுமை

இ ) ஆறாம் வேற்றுமை    ஈ ) முதல் வேற்றுமை

**iii)** வினா ஒன்றாக இருக்க விடை வேறொன்றாக இருந்தால், அது _______ ஆகும்.

அ) வினாவழு    ஆ) விடைவழு

இ ) காலவழு    ஈ ) இடவழு

6 ) **அடைப்புக்குறிக்குள் கூறியவாறு பொருத்தமான விடையைத் தேர்ந்தெடு.**

**i) சிங்கக் கன்று** ( வழு நீக்கி எழுதுக ) **3 x 1 = 3**

அ ) சிங்கக்குட்டி    ஆ) சிங்கம்

இ ) சிம்மக் குட்டி    ஈ ) சிங்கக் குருளை

**ii) குரங்கினது வால்** ( வேற்றுமை உருபினை எடுத்து எழுதுக )

அ ) ஆது    ஆ) அது

இ ) அன்    ஈ ) இன்

iii) துவையலுக்கு பருப்பு வாங்கு ( வேற்றுமையின் பொருளினை எழுதுக )

அ ) கொடை ஆ) தகுதி

இ ) பொருட்டு ஈ ) அதுவாதல்

7 ) பொருத்தமான இலக்கணக் குறிப்பினைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

**i ) கருமேகம்** **3 x 1 = 3**

அ ) இனமில்லா அடைமொழி ஆ) நேர் இணைச்சொற்கள்

இ ) இனமுள்ள அடைமொழி ஈ ) எதிர் இணைச்சொற்கள்

**ii ) மரத்தின் கண் கிளி.**

அ ) இரண்டாம் வேற்றுமை ஆ) மூன்றாம் வேற்றுமை

இ ) ஆறாம் வேற்றுமை ஈ ) ஏழாம் வேற்றுமை

**iii ) செல்வி பாடினான்**

அ ) திணைவழு ஆ) பால்வழு

இ ) இடவழு ஈ ) மரபுவழு

8 ) **சரியான வாக்கியத்தைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** **3 x 1 = 3**

**i)** அ) வழு என்பதற்கு குற்றம் என்று பொருள்.
ஆ) வழு என்பதற்கு ஒழுக்கம் என்று பொருள்.
இ) வழு என்பதற்கு பிரிவு என்று பொருள்.

**ii)** அ) நாயோடு குட்டியும் சென்றது என்பது இரண்டாம் வேற்றுமை.
ஆ) நாயோடு குட்டியும் சென்றது என்பது மூன்றாம் வேற்றுமை.
இ) நாயோடு குட்டியும் சென்றது என்பது நான்காம் வேற்றுமை.

**iii)** அ ) அடைமொழி இரண்டு வகைப்படும்.
ஆ ) அடைமொழி மூன்று வகைப்படும்.
இ ) அடைமொழி எட்டு வகைப்படும்.

<u>பிரிவு - இ</u>

9 ) கொடுக்கப்பட்டுள்ள பாடலைப் படித்துப், பொருளுணர்ந்து கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக. **5 x 1 = 5**

வானரங்கள் கனிகொடுத்து மந்தியொடு கொஞ்சும்
மந்திசிந்து கனிகளுக்கு வான்கவிகள் கெஞ்சும்
கானவர்கள் விழிஎறிந்து வானவரை அழைப்பார்
கமனசித்தர் வந்துவந்து காயசித்தி விளைப்பார்

தேனருவித் திரைஎழும்பி வானின்வழி ஒழுகும்
செங்கதிரோன் பரிக்காலும் தேர்க்காலும் வழுகும்
கூனல்இளம் பிறைமுடித்த வேணிஅலங் காரர்
குற்றாலத் திரிகூட மலை எங்கள் மலையே !

<u>வினாக்கள்</u>

i ) மந்தி என்பது எது ?

அ) ஆண் குரங்கு ஆ) பெண் குரங்கு

இ) குரங்கு குட்டி ஈ) தேவாங்கு

ii ) வான்கவிகள் என்பது யாரைக் குறிக்கும் ?

அ) குரங்குகள் ஆ) தேவர்கள்

இ) மக்கள் ஈ) பறவைகள்

iii ) காயசித்தி என்பதன் பொருள் யாது ?

அ) மகளிர் தம் காலில் அணியும் ஆபரணம்

ஆ) உடலை நெடுங்காலம் அழியாதிருக்கச் செய்யும் செயல்

இ) குரங்குகள் கூட்டம் கூட்டமாகத் தங்கும் இடம்

ஈ) தானியங்கள் சேர்த்து வைக்கும் இடம்

iv ) சூரியனின் தேரை இழுப்பவை எவை ?

அ) காமதேனு ஆ) குதிரைகள்

இ) காளைகள் ஈ) களிறுகள்

v ) வேணி - என்பதன் பொருள் __________.

அ) வெண்மை ஆ) சந்திரன்

இ) சடை ஈ) தோல்

10 ) பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. **5 x 1 = 5**

i ) குற்றாலக் குறவஞ்சியின் ஆசிரியர் __________.

அ) நாதக்குத்தனார் ஆ) திரிகூடராசப்பக் கவிராயர்.

இ) ஔவையார் ஈ) சீத்தலை சாத்தனார்

ii ) நாலடியாரில் ____________ பாடல்கள் உள்ளன.

அ) நாற்பது ஆ) நானூறு

இ) நான்காயிரம் ஈ) நான்கு

**iii )** வீட்டுக்கு ஒளி __________ ஆவாள்.

அ) ஆண் ஆ) தெய்வம்

இ) குழந்தைகள் ஈ) பெண்

**iv )** இளம்பிறைச் சந்திரனை அணிந்தவர் _________.

அ) குற்றாலநாதர் ஆ) திருமால்

இ) முருகன் ஈ) இந்திரன்

**v )** செய் - என்பதன் பொருள் _________.

அ) தொலைவு ஆ) ஆடை

இ) வயல் ஈ) தலை

**11 )** பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. **5 x 1 = 5**

**i )** அரிசிலாற்றின் தென்கரையில்______________ உள்ளது.

அ) தாராசுரம் ஆ) தஞ்சை

இ) நெல்லை ஈ) கும்பகோணம்

**ii )** இன்றைய கண் தானத்திற்கு அன்றே எடுத்துக்காட்டாய் விளங்கியவர்

அ) வேடன் குகன் ஆ) வேடன் பரஞ்சோதி

இ) வேடன் வேங்கையன் ஈ) வேடன் கண்ணப்பன்.

**iii )** கொழும்புவில் கூடாரம் போட்டவர் __________ வணிகம் செய்தார்.

அ) கொத்தமல்லி ஆ) கொழுந்து

இ) கொட்டைப் பாக்கு ஈ) கொய்யாப்பழம்

**iv )** சோழ மண்டலத்தில் எங்கும் எழுவது ______________.

அ) இசையொலி ஆ) பறவைகள் ஒலி

இ) தேனீக்களின் ரீங்காரம் ஈ) குதிரைகளின் கனைப்பொலி

**v )** சாமி கும்பிடுவோர் பாடுவது _______________ .

அ) ஒப்பாரிப்பாடல். ஆ) கானாப் பாடல்.

இ) வழிபாட்டுப்பாடல். ஈ) தொழில்பாடல்.

**12 )** அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.

**அ)** பொருள் தருக. **4 x 1/2 = 2**

i ) மிசை iii ) தஞ்சம்

ii ) தால் iv ) கொழிக்கும்

ஆ ) பிரித்து எழுதுக. 4 x 1/2 = 2

i ) செங்கதிரோன் iii ) பூம்புனல்

ii ) நன்கணியா் iv ) கோட்டுமரம்

இ ) சேர்த்து எழுதுக. 4 x 1/2 = 2

i ) வெயில் + ஒழுகும் iii ) சாய்ந்து + ஆடு

ii ) நன்மை + அறம் iv ) பெரும் + மழை

ஈ ) எதிர்ச்சொல் தருக. 4 x 1/2 = 2

i ) அறம் iii ) வாட

ii ) புகழ் iv ) அணி

உ ) பொருத்துக. 4 x 1/2 = 2

தீம்தரிகிட - நாதசுரம்
மீட்டொலி - மத்தளம்
நல்லொலி - புல்லாங்குழல்
கான ஒலி - வீணை

13 ) ஏதேனும் ஆறு வினாக்களுக்கு மட்டும் விடை தருக. 6 x 2 = 12

அ) வாய்மொழி இலக்கியம் என்று எதைக் கூறுவா் ?

ஆ ) புறநானூற்றைத் தமிழ்க்கருவூலம் என்பது ஏன் ?

இ ) கடும் மழை பெய்தால் மரமும் குடையும் என்னவாகும் ?

உ ) நான்கு மணிகளைப் போல் விளங்கும் கருத்துகள் யாவை ?

ஊ ) எங்கு நிலம் நல்லதாய் இருக்கும் ?

எ ) ஐராவதீசுவரா் கோவிலை யுனெஸ்கோ எவ்வாறு அறிவித்துள்ளது ?

ஏ ) குற்றால நாட்டில் ஒடுங்கி இருப்பவை எவை? எவா் ஒடுங்கி இரார் ?

ஐ) தாராசுரக் கோவிலின் விமானமும் மண்டபமும் எதைக் காட்டுவதாய் கார்ல்சேகன் கூறுகிறார் ?

ஒ) அரிவாள் எத்தகையது என்று பெண்கள் பாடுகிறார்கள் ?

14 ) அடிபிறழாமல் எழுதுக. 1 x 4 = 4

நாய்க்கால் - எனத் தொடங்கும் நாலடியார் பாடலை எழுதுக.

16 ) பின்வரும் தலைப்புகளில் ஏதேனும் ஒன்றிற்கு மட்டும் துணைப்பாடக் கட்டுரை எழுதுக. 1 x 8 = 8

அ) எது பெரிய உண்மை ?

ஆ ) தங்க மாம்பழமும் சூட்டுக் கோலும்.